**தலைப்பு 13 – இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையில் குறிப்பிடப்பட்ட தலைப்பின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கணக்காய்விற்கு சமா்ப்பிக்கப்பட்டன. அக்கணக்கில் பிரதிபலிக்கப்பட்ட நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் திணைக்களத் தலைவர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

தலைப்பு 13 – இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூன் 23 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதிசார் ஏற்புடைமையுடன் வியாபார செயற்பாடுகள் காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து நிதிசார் வேலைகள் திட்டமிடப்படல் வேண்டும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறைபாடுகள் காணப்பட்டமை | 2.2.1 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் வருமானங்களின் சேகரிப்பு மீது போதியளவான கட்டுப்பாட்டினை வழங்கக் கூடிய முறைமையொன்று காணப்படல் வேண்டும். | 1. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.4 |
| | | 2. முகாமைத்துவ பலவீனங்கள் | 2.5 |
| | | 3. வங்கிக் கணக்குகளினை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.7 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 4. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் | 2.9 |
| | | 5. | உள்ளகக் கணக்காய்வு அலகு ஸ்தாபிக்கப்படாமை | 2.10 |
| | | 6. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்படாமை | 2.11 |
| | | 7. | மிகைப் பதவியணியினர்க்கு அங்கீகாரத்தைப் பெறத் தவறியமை. | 2.12(ஆ) |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் காணப்படும் செலவின விடயங்கள் அத்துடன் புதிய அல்லது அதிகரிப்பதற்கான முன்மொழிவுகள் சிக்கனம் மற்றும் வினைத்திறனின் நோக்கில் அமைச்சில் நுணுக்கமாக ஆராய்தல். | 1. | செயற்பாடுகளின் செயலாற்றலின்மை. | 2.2.2 |
| | | 2. | வங்கிக் கணக்குகளினை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.7 |
| | | 3. | பதவியணியினர்க்கான முறையற்ற பயிற்சி | 2.12 (அ) |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் அவர் தனது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவர்க்கு இடமளிக்கப்படுகின்றது. | 1. | செயலாற்றல் அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காமை | 2.2.3 |
| | | 2. | பதிவேடுகள் மற்றம் புத்தகங்கள் பேணப்படாமை | 2.3 (அ) மற்றும் 2.8 |
| | | 3. | வெளித்தரப்பினர்க்கு சொத்துக்கள் வழங்கப்படமை. | 2.3 (உ) |

| | | | |
|---|---|---|---|
| 127(4) | தனக்குக் கீழுள்ள ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறைபாடு சமர்ப்பிக்கப்படுவதுடன் அவற்றில் தான் கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சில் பரீட்சிக்கப்பட்டதுடன் மதிப்பீடுகள் மற்றும் உண்மை உள்ளபடியான செலவினங்களில் காணப்படும் முக்கியமான வித்தியாசங்கள் தன்னால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல். | மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை | 2.6 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 ஆணைக்குழுவின் முக்கிய செயற்பாடுகள்

(அ) இலங்கை அரசியலமைப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளுடன் அனைத்து அரச நடைமுறைகளும் இணங்குவதை உறுதிப்படுத்தல்.

(ஆ) சட்டம் இயற்றுதல், நிர்வாக வழிகாட்டல்கள், மற்றும் அடிப்படை உரிமைகளுடன் இணங்குவதிலுள்ள நடைமுறைகள் என்பவற்றிக்கு அரசிற்கு ஆலோசனை மற்றும் உதவிபுரிதல்.

(இ) அடிப்படை உரிமைகளின் வரம்பு மீறல்கள் அல்லது உடனடி வரம்பு மீறல்கள் தொடர்பிலான முறைபாடுகள், உள்நோக்கி மற்றும் ஆராய்ந்து விசாரிப்பதற்கு மற்றும் அதற்குப் பின்னர் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சமரசம் மற்றும் மத்தியஸ்தம் மூலம் அதற்கான தீர்மானத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஈ) சர்வதேச சட்டங்கள் மற்றும் நிர்வாக நடைமுறைகளினை இலங்கை சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுடனான ஒருமைப்பாட்டிற்குக் கொண்டுவருவது தொடர்பில் அரசிற்கு பரிந்துரைகளினை மேற்கொள்ளல்.

(உ) சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தங்களுடன் இணங்குவதற்கு மற்றும் மனித உரிமைகளின் துறையிலுள்ள ஏனைய சர்வதேச கருவிகள் தொடர்பில் அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.

(ஊ) நாட்டில் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுகளை மேம்படுத்தல்.

### 2.2 செயலாற்றல்

#### 2.2.1 திட்டமிடல்

2014 பெப்பரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டில் ஆணைக்குழுவினால் செயற்படுத்த வேண்டிய 06 முக்கிய செயற்பாடுகள் காணப்பட்டதுடன் ஆணைக்குழுவினால் திட்டமிடப்பட்ட விளைவுகளின் அடைவுகளுக்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆணைக்குழுவின் மீளாய்வாண்டிற்கான நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனரீதியான கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போதைய பதவியணியினர் தொடர்பான தகவல் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த பாதீட்டில் முன்னுரிமை அடிப்படையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்ட தகவல்களின் மீளாய்வாண்டு தொடர்பில் செயற்பாட்டு கால அட்டவணை மற்றும் எதிர்ப்பார்க்கப்பட்ட வெளியீடு/பெறுபேறு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 செயற்பாடுகளின் செயலாற்றலின்மை**

-----------------------------------------------------------

2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ஆணைக்குழுவினால் 06 முக்கிய செயற்பாடுக்ள செயல்படுத்த வேண்டியிருந்தது. ஆகையினால், முறைப்பாடுகளின் செயலாற்றல் தொடர்பான விபரங்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்விற்கு செயற்படுத்தப்பட்ட ஏனைய செயற்பாடுகளின் செயலாற்றல் மீதான தகவல்களினை சமர்ப்பிப்பதற்கு ஆணைக்குழுவின் அலுவலகம் தவறியிருந்தது. எவ்வாறாயினும், முக்கிய செயற்பாடுகளின் செயலாற்றலுக்கு வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து ரூபா 208 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 9 மில்லியன் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 3,046 தீர்த்து வைக்கப்படாத முறைபாடுகள் காணப்பட்டதுடன். 2017 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் 7,949 புதிய முறைபாடுகள் பெறப்பட்டிருந்தது. ஆகையினால், மீளாய்வாண்டில் 10,995 முறைபாடுகள் மீது ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்தது. மேலும், பல்வேறு காரணங்கள் காரணமாக 2,917 முறைபாடுகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்ததுடன் மிகுதியாகவுள்ள 8,078 முறைபாடுகளில், சமரசம் செய்யப்பட்ட 195 முறைப்பாடுகள், நீதிமன்றம் மற்றும் ஏனைய அதிகாரசபைகளுக்கு முன்வைக்கப்பட்ட 25 முறைப்பாடுகள் மற்றும் பரிந்துரைகள் வழங்கப்பட்ட 84 முறைபாடுகள் உள்ளடங்களாக, 304 முறைபாடுகள் தீர்க்கப்பட்டிருந்தது.

**2.2.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

-----------------------------------------------------------

2002 செப்தெம்பர் 12 இன் 402 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை ஆணைக்குழுவினால் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இருப்பினும், அந்த அறிக்கை 2018 யூன் 07 வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

-----------------------------------------------

ஆணைக்குழுவின் சொத்துக்கள் தொடர்பில் நடாத்தப்பட்ட தெரிவு கணக்காய்வுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சொத்துக்கள் பதிவேடு**

-------------------------------------

1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்ட முறையொன்றில் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) மோட்டார் வாகனங்களின் பயன்பாடு**

ஆணைக்குழுவின் புலனாய்வுகளினை நடாத்துகின்ற உத்தியோகத்தர்களுக்கு இருபத்தி நான்கு மோட்டார் சைக்கிள்கள் கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த மோட்டார் சைக்கிள்கள் கடமைகளுக்குரிய பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த மோட்டார் சைக்கிள்கள் வருடாந்த அளவைச் சபைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

ஆணைக்குழுவினால் உரிமையைக் கொண்டுள்ள, அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட அண்ணளவாக ரூபா 120,000 பெறுமதியுடைய நான்கு மோட்டார் சைக்கிள்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அகற்றப்பட்டிருக்காததுடன் வாகனத் தரிப்பிடத்தில் வைக்கப்பட்டிருந்தது.

**(ஈ) வருடாந்த அளவைச் சபையினை நடாத்துதல்**

2016 மார்ச் 31 இன் 05/2016 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் உறுப்புரையின் பிரகாரம் வருடாந்த அளவைச் சபை நடாத்தப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கையின் 3.2.6 ஆம் பந்தியின் பிரகாரம் அவற்றின் மீதான அறிக்கைகள் 2018 யூன் 15 அளவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவேண்டியிருந்தது. மீளாய்வாண்டிற்கான வருடாந்த அளவைச் சபை நடாத்தப்பட்டிருந்த போதிலும், சுற்றறிக்கையின் 3.2.4 மற்றும் 3.2.5 பந்தியின் பிரகாரம் அளவைச் சபையின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விற்பனை, அகற்றல் மற்றும் திருத்தஞ் செய்ய வேண்டிய பொருட்கள் 2018 ஏப்ரல் 10 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த செயற்பாடுகளினை மேற்கொண்டிராது தயாரிக்கப்பட்ட, அளவைச் சபையின் அறிக்கை 2017 யூலை 17 இல் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(உ) வெளித்தரப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட சொத்துக்கள்**

ஆணைக்குழு உரிமையைக் கொண்டிருந்த இரண்டு ஜீப் வண்டிகள் மற்றும் வேன் ஒன்று 2017 நவம்பர் 07 இல் சனாதிபதி செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனங்கள் சட்ட ரீதியாக மாற்றஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

ஆணைக்குழு அலுவலகத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மீது நடாத்தப்பட்ட கணக்காய்வு தெரிவுச் செவ்வைகளின் போது பின்வரும் முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) சுத்திகரிப்பு சேவையினை பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுதாரர்களில் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரரினால் விலைமனு சமர்ப்பிப்பு படிவமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அரச பெறுகை வழிகாட்டல்களின் வழிகாட்டல் 7.8.4 (ஊ) பிரகாரம் பாரிய விலகலொன்றாக குறித்த தேவைப்பாட்டினை செயற்படுத்தாமையினை கருத்திற்கொள்வதன் மூலம் பெறுகைகள் குழு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும், அது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2018 சனவரி 31 இல் 16 மாதங்கள் காலப்பகுதியொன்றுக்குமேல் காலம் கடந்து காணப்பட்ட, 2016 ஆகஸ்ட் 08 இல் செலுத்துகையொன்றாக பதிவழிக்கப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டுக் காணப்பட்ட ரூபா 67,717 பெறுமதியுடைய

காசோலையொன்று காணப்பட்ட போதிலும், அந்தக் காசோலை தொடர்புடைய தரப்பினர்க்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 14 இல் வேலை நிலையமொன்றின் கொள்வனவுக்கு அரச கூட்டுத்தாபனமொன்றில் கட்டளையொன்று வைக்கப்பட்டிருந்தது. ஆணைக்குழுவின் அலுவலகங்களினால் தொடர்புடைய வகைகள் பெறப்பட்டமையை உறுதிப்படுத்தாது தொடர்புடைய கூட்டுத்தாபனத்தினால் விநியோகிக்கப்பட்ட போட்டோ பிரதி பற்றுச்சீட்டொன்றின் அடிப்படையில் ரூபா 154,721 பெறுமதியுடைய காசோலையொன்று எழுதப்பட்டிருந்ததுடன், விநியோகிக்கப்பட்டது அலுவலகத்தில் தொடர்ந்தும் காணப்பட்டிருந்தது.

(ஈ) ஆணைக்குழுவின் அலுவலகத்தில் சேவையாற்றும் பொழுது விபத்தொன்றை சந்தித்த உத்தியோகத்தரொருவர்க்கு, 1993 செப்தெம்பர் 21 இன் 22/93 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திராது மீளாய்வாண்டில் ரூபா 225,063 போக்குவரத்து படியொன்று செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 முகாமைத்துவ பலவீனங்கள்

**நேரடி வெளிநாட்டு உதவி**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுவிஸ்லாந்து அரசு மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தினால் ஆணைக்குழுவுக்கு 2016 ஆம் ஆண்டில் ரூபா 6.46 மில்லியயன் வெளிநாட்டு உதவி அளிக்கப்பட்டிருந்தது. அந்த வெளிநாட்டு உதவியில், ரூபா 4.22 மில்லியன் தொகையொன்று பயன்படுத்தப்பட்டிராது 2017 சனவரி 01 அளவில் சேமிக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 3.55 மில்லியன் தொகையொன்று மீளாய்வாண்டில் சேமிக்கப்பட்டிருந்தது. 2014 யூன் 26 இன் எம்ஔஎவ்பி/ஈஆர்டீ/2014/01 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வெளிவாரி வளங்கல் திணைக்களத்திற்கு அந்த வெளிநாட்டு உதவி தொடர்பான விபரங்களினை அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டிய போதிலும், ஆணைக்குழுவின் அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் ஆணைக்குழுவினால் ரூபா 1.15 மில்லியன் வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருந்ததுடன், அவற்றின்மீது நிதிப்பிரமாணம் 620, 625(3) மற்றும் 625(7) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் அலுவலகத்தினால் அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் அந்த வெளிநாட்டு உதவிகளின் தகவல்களின் பொது கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 2.6 செயற்பாடுகளின் செயலாற்றலுக்கு பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 வருட காலப்பகுதிக்குள் ஆணைக்குழுவிற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள், பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | செலவினத்தின் வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | தேறிய ஏற்பாட்டின் சதவீதமொன்றாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழும் | 149.95 | 144.84 | 5.11 | 3.41 |
| | மூலதனம் | 12.75 | 5.59 | 7.16 | 56.16 |
| | **மொத்தம்** | **162.70** | **150.43** | **12.27** | **7.54** |
| 2014 | மீண்டெழும் | 150.50 | 137.87 | 12.63 | 8.39 |
| | மூலதனம் | 40.75 | 15.73 | 25.02 | 61.40 |
| | **மொத்தம்** | **191.25** | **153.60** | **37.65** | **19.69** |
| 2015 | மீண்டெழும் | 172.20 | 159.91 | 12.29 | 7.14 |
| | மூலதனம் | 14.30 | 8.73 | 5.57 | 38.95 |
| | **மொத்தம்** | **186.50** | **168.64** | **17.86** | **9.58** |
| 2016 | மீண்டெழும் | 174.00 | 170.30 | 3.70 | 2.13 |
| | மூலதனம் | 14.20 | 13.19 | 1.01 | 7.11 |
| | **மொத்தம்** | **188.20** | **183.49** | **4.71** | **2.50** |
| 2017 | மீண்டெழும் | 197.25 | 192.34 | 4.91 | 2.49 |
| | மூலதனம் | 11.45 | 7.26 | 4.19 | 36.59 |
| | **மொத்தம்** | **208.70** | **199.60** | **9.10** | **4.36** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை ஏற்பாடுகள்**

03 செலவின விடயங்களுக்கு ரூபா 5.6 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால், ஏற்பாடுகளினைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்புக்கள் ரூபா 2.5 மில்லியனாக காணப்பட்டிருந்தது. அதற்கமைய, தொடர்புடைய செலவின விடயங்கள் தொடர்பிலான தேறிய ஏற்பாடுகளின் சேமிப்புக்களின் சதவீதம் 12 சதவீதம் தொடக்கம் 63 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

### 2.7 வங்கிக் கணக்குகளின் செயற்படுத்துகை

2007 செப்தம்பர் 05 இன் 5/2007 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரகாரம், புதிய வங்கி கணக்குகளினை திறப்பதற்கு இணையாக தற்போது காணப்படும் அனைத்து வங்கி கணக்குகளினை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குக்கு மேலதிகமாக மற்றுமொரு 05 வங்கிக் கணக்குகளில் ரூபா 1.5 மில்லியன் மீதிகள் தொடர்ந்து காணப்பட்டது.

**2.8 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

நிதிப்பிரமாணம் 751 மற்றும் 763 ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஆணைக்குழுவினால் இருப்புப் புத்தகங்கள் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

**2.9 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| **(அ) சட்டரீதியான ஏற்பாடுகள்** | | |
| 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 30 ஆம் பிரிவு | - | 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் பராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயல் நடைமுறைக் கோவை** | - | |
| செயல் நடைமுறை விதி 89 இன் vii ஆம் அத்தியாயம் | - | ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு எழுத்தில் கடமைப்பட்டியல்களினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | | |
| நிதிப்பிரமாணம் 135 | - | நிதிப்பிரமாணங்கள், நிதிக் கட்டுப்பாடுகளுக்கான செயற்பாடுகளுடன் இணக்கப்பாடு ஏற்படக்கூடியதாக உள்ளகப் பரீட்சிப்பு முறையொன்றில் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு நிதிக் கட்டுப்பாடுகளுக்கான செயற்பாடுகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய போதிலும், குறித்த தேவைப்பாட்டினைப் பூர்த்தியாக்கக் கூடியதாக உத்தியோகத்தர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) 2016 மே 31 இன் 36/2016 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கை | - | அவர்களின் கடமைகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டிராத கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களினை பின்பற்றும் இரண்டு உத்தியோகத்தர்க்ளுக்கு ஆணைக்குழுவினால் ரூபா 136,162 கல்விசார் படியொன்று அளிக்கப்பட்டிருந்தது. மேலும், சுற்றறிக்கையின் உறுப்புரைகளின் பிரகாரம் நிதி உதவிகளினைப் பெற்ற உத்தியோகத்தர்கள் காலாண்டு செயலாற்றல் அறிக்கைகளினை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும், குறித்த உத்தியோகத்தர்கள் அந்த அறிக்கைகளினைக் கூட சமர்ப்பித்திருக்கவில்லை. |

**2.10 உள்ளகக் கணக்காய்வு**

-------------------------------------

ஆணைக்குழுவின் அலுவலகங்களுக்கு உள்ளகக் கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.11 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

-------------------------------------------------------------------

ஆணைக்குழுவினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.12 மனித வள முகாமைத்துவம்**

---------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் தனிநபர் ஊதியங்கள் மீதான செலவினம்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

மேற்குறிப்பிடப்பட்ட 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளின் செயலாற்றலுக்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர், வெற்றிடங்கள் மற்றும் மிகை பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான தனிநபர் ஊதியங்களின் செலவின விடயத்தின் கீழ் ஆணைக்குழுவினால் ரூபா 96.7 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. ஆகையினால், தலா மூலதனச் செலவினம் ரூபா 636,161 ஆகக் காணப்பட்டிருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை பதவியணியினர் |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 46 | 14 | 32 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 58 | 01 | 57 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 88 | 92 | - | 04 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 41 | 46 | - | 05 |
| (v) | அமைய/ ஒப்பந்தம் | - | 01 | - | 01 |
| | **மொத்தம்** | **233** | **154** | **89** | **10** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பபடுகின்றன.

**(அ) பதவியணியின் பயிற்சி**

கனணிப் பயிற்சிப் பாடநெறியொன்றில் பங்கேற்பதற்கு மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 225,055 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த பாடநெறியில் முறையாக பங்கேற்றிருந்த குறித்த உத்தியோகத்தர்களின் உறுதிப்படுத்தல் தொடர்பான போதியளவான தகவல் கணக்காய்விற்கு கிடைக்கக் கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) மிகை பதவியணியினர்க்கான அங்கீகாரமின்மை**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளடக்கிக் காணப்பட்ட 10 நபர்களின் மிகை பதவியணியினர்க்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.